ஆளுநர்களை அரசியல் கருவிகளாக்கிவிட்டது பாஜக

கி.வீரமணி குற்றச்சாட்டு

தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகிறார் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி.

திருநெல்வேலி, ஏப். 2: ஆளுநர்களை பாஜக தனது அரசியல் கருவிகளாக்கிவிட்டது என்று குற்றஞ்சாட்டினார் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி.

தச்சநல்லூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இந்தியா கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசியதாவது: நாட்டில் கடந்த 10 ஆண்டுகளாக மக்களுக்கு பாதகமான ஆட்சியை பாஜக கொடுத்துள்ளது. மாற்றம் தேவை என்று கூறி வந்தவர்களின் ஏமாற்றமான செயலால் மக்கள் சிரமம் மட்டுமே அடைந்துள்ளனர். ஊழலை ஒழிப்போம், வேலைவாய்ப்பைப் பெருக்குவோம் என மோடி அளித்த பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. தேர்தல் பத்திர ஊழலால் பெருமளவு பணத்தைக் குவித்துள்ளனர். ஆனால், இப்போது வீரவசனங்களையும், உருக்கமான உரையாடல்களையும் செய்து மீண்டும் ஆட்சிக்கு வர முயற்சிக்கிறார்கள். மோடியின் வித்தையை மீண்டும் நம்பி ஏமாற மக்கள் தயாராக இல்லை.

இந்நாட்டு மக்கள் அனைவரும் எனது குடும்பத்தினர் என்று சொல்லும் மோடி, மணிப்பூரில் நடைபெற்ற மனிதநேயமற்ற தாக்குதலைக் கண்டித்து நேரில் சென்றிருக்க வேண்டாமா? வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உடமைகளை இழந்து தவித்த திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களுக்கு நிதி கொடுக்காவிட்டாலும், ஆறுதலுக்காக விசாரித்திருக்க வேண்டாமா? இவற்றை மக்கள் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாஜக ஆளுநர்களை அரசியல் கருவிகளாக்கிவிட்டது. தங்களுக்கு எதிராக குரல் கொடுக்கும் ஆட்சியாளர்கள் மீது ஏவி விடும் அம்புகளாக ஆளுநர்களைப் பயன்படுத்துகிறார்கள். மக்களவையிலும், நிர்வாகத்திலும் பல் வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளனர். ஆகவே, வரும் தேர்தல் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக முக்கியமான தேர்தல். தீவிர சிகிச்சைப்பிரிவில் இருக்கும் ஜனநாயகத்தைக் காப்பாற்றும் மருந்துவர் போல தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தியா கூட்டணிக்கு வலுசேர்த்து வருகிறார். இத் தேர்தலில் அதிக இடங்களில் வென்று இந்தியா கூட்டணி ஆட்சியை நிச்சயம் பிடிக்கும். திருநெல்வேலி தொகுதியின் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸுக்கு கை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்றார் அவர்.

இக் கூட்டத்தில் திமுக மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், காங்கிரஸ் முன்னாள் மாநிலத் தலைவர் தங்கபாலு, வேட்பாளர் ராபர்ட் புரூஸ், மு.அப்துல் வஹாப் எம்எல்ஏ, மேயர் பி.எம்.சரவணன், மாநில நிர்வாகிகள் மாலைராஜா, விஜிலா சத்தியானந்த், காங்கிரஸ் மாநகர் மாவட்டத் தலைவர் சங்கரபாண்டியன், பொருளாளர் ராஜேஷ் முருகன், ஐயப்பன், கவிப்பாண்டியன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

காங்கிரஸ் வேட்பாளர் வாக்கு சேகரிப்பு

திருநெல்வேலி, ஏப்.2: திருநெல்வேலி மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ் திருநெல்வேலி மாநகரில் உள்ள பல இடங்களில் செவ்வாய்க்கிழமை வாக்கு சேகரித்தார்.

திருநெல்வேலி நகரம் அலங்கார வளைவு பகுதியில் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ராபர்ட் புரூஸ் தனது பிரசாரத்தை தொடங்கினார். அப்போது திமுக மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், முன்னாள் எம்.எல்.ஏ. மாலை ராஜா,மேயர் சரவணன், துணை மேயர் கே.ஆர்.ராஜூ, மாநகர திமுக செயலாளர் சுப்பிரமணியன், மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் விஜிலா சத்தியானந்த், திருநெல்வேலி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சங்கரபாண்டியன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர். தொடர்ந்து, கீழபுதுத்தெரு, வ.உ.சி. தெரு, டி.எம்.சி. காலனி, செண்பகம் பிள்ளை தெரு, காட்சி மண்டபம் பகுதிகளில் ராபர்ட் புரூஸ் வாக்கு சேகரித்தார். மேலும் வீடு வீடாக திமுக அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பேட்டை செக்கடி, ரொட்டிகடை பகுதிகளில் கடை வைத்திருக்கும் வியாபாரிகள், ஹோட்டல் தொழிலாளிகளிடம் வாக்கு சேகரித்தார். பின்னர் காந்திநகர், பழைய பேட்டை ஆகிய இடங்களுக்கு சென்ற ராபர்ட் புரூஸுக்கு பொது மக்கள் அமோக வரவேற்பு அளித்தனர். அப்போது வேட்பாளர் ராபர்ட் புரூஸ் பேசியதாவது:

பாளையங்கோட்டை குலவணிகர்புரத்தில் ரயில்வே மேம்பாலம் அமைக்க விரைந்து நடவடிக்கை எடுப்பேன். திருநெல்வேலி மாவட்டத்தில் விவசாயத்துக்கும் குடிநீருக்கும் தட்டுப்பாடின்றி தண்ணீர் கிடைக்க முயற்சி எடுப்பேன். பிரதான அணை யான பாபநாசம் அணையையும், மணிமுத்தாறு அணையையும் இணைத்து திருநெல்வேலி மாவட்டத்தை வளமாக்குவேன். நெல்லையப்பர் கோயிலுக்கு பக்தர்கள் எவ்வித சிரமமும் இன்றி சென்று வரவும், சுவாமி நெல்லையப்பர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசலை தடுக்கவும் ஈரடுக்கு மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்றார்.

பின்னர் பாறையடி, சாலியர் தெரு, லாலா சத்திரமுக்கு வழியாக வடக்கு ரதவீதி வந்த ராபர்ட் புரூஸுக்கு தொண்டர்கள், நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

மாநகராட்சி ஒப்பந்தப் பணி எடுப்பதில் விதிமீறல்: 2 பேர் மீது வழக்கு

திருநெல்வேலி, ஏப். 2: திருநெல்வேலி மாநகராட்சியில் தவறான தகவல்களை தெரிவித்து ஒப்பந்தப் பணியை எடுக்க முயன்றதாக 2 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிந்தனர்.

தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தில் 2024-25 ஆம் ஆண்டு பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருந்தன. இதையொட்டி, தனியார் நிறுவனம் சார்பில் ஒப்பந்தம் எடுக்க ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. அதில், தங்களது நிறுவனத்திற்கான வாகனங்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தவை தவறான தகவல் என்பதும், வாகனங்களின் உரிமையாளர் பெயரை மாற்றி மோசடி செய்து ஒப்பந்தம் எடுக்க முயன்றதும் தெரியவந்ததாம்.

இதுகுறித்து, திருநெல்வேலி குற்றப்பிரிவு போலீஸாரிடம் மாநகராட்சியின் இளநிலை பொறியாளர் அளித்த புகாரின் பேரில், சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்தின் பங்குதாரர்கள் 2 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

ஊழல் செய்வதற்காக சட்டம் இயற்றியது பாஜகதான்

கனிமொழி எம்.பி.

திருநெல்வேலி நகரம் வாகையடி முனையில் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸுக்காக வாக்கு சேகரித்த திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி.

திருநெல்வேலி, ஏப்.2: ஊழல் செய்வதற்காக ஒரு சட்டத்தை இயற்றியது பாஜகதான் என்றார் திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி.

திருநெல்வேலி நகரம் வாகையடி முனையில் காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸுக்காக வாக்கு சேகரித்த திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி பேசியதாவது:

ஆங்கிலேயர்கள் ஆண்டபோது நம்முடைய உரிமைகளையும், உடமைகளையும் பறித்துச் சென்றதைப் போல பாஜகவின் ஆட்சியில் ஜிஎஸ்டி என்ற பெயரில் தமிழகத்தின் வளங்கள் அனைத்தையும் பிடுங்கி வருகிறார்கள். மாநில உரிமைகளை சட்டங்களால் சிதைத்துவிட்டனர். நம்முடைய சுயமரியாதையை, மொழியை, இனத்தை, மாண்பை கொச்சைப்படுத்திவிட்டனர். பாஜக தனது அரசியல் ஆதாயத்துக்காக ஒற்றுமையாக வாழும் மக்களை பிரித்து நிம்மதி இல்லாத சூழ்நிலையை உருவாக்குகிறது. அதற்கு எடுத்துக்காட்டு மணிப்பூர் கலவரம்தான். உலகம் முழுவதும் சுற்றி வரும் மோடி, மணிப்பூரில் பாதிக்கப்பட்ட மக்களை சென்று பார்த்தாரா?

கனமழையால் திருநெல்வேலி, தூத்துக்குடி, சென்னை பாதிக்கப்பட்டபோது, தமிழகத்திற்கு வராத மோடி, தேர்தல் வந்ததும் வாரம் இரு முறை தமிழகம் வருகிறார். எங்களை ஹிந்தி படிக்க வற்புறுத்திய அவர்கள் தமிழை கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு பக்கம் தமிழை தொன்மையான மொழி எனக்கூறும் பாஜகவினர், மறுபக்கம் தமிழர்களை கேவலப்படுத்தி வருகிறார்கள். ஊழல் செய்வதற்காகவே ஒரு சட்டத்தை இயற்றியது பாஜகதான். தேர்தல் பத்திரம் என்ற திட்டத்தை கொண்டு வந்து, அமலாக்கத் துறையை ஏவி சட்டப்பூர்வமாக ஊழல் செய்திருக்கிறார்கள். இது கத்தியைக் காட்டி வழிப்பறி செய்வதைப் போன்றது.

லடாக்கிற்குள் சீனா ஊடுருவிவிட்டது. அருணாசலப் பிரதேசத்தில் சீன கிராமங்கள் உருவாகிவிட்டன. இந்தியாவை காப்பாற்ற வேண்டிய மிகப்பெரிய வீரர் மோடிதான். ஆனால், அவர் இதற்கெல்லாம் பதில் சொல்லாமல் திடீரென தமிழர்களை பற்றியும், கச்சத்தீவை பற்றியும் பேசுகிறார். ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகளால் 40 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டது அரசியல் ஆதாயத்துக்காக நடத்தப்பட்டது என்றால், இவர்களைவிட ஆபத்தானவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. இவர்களுக்கு நாம் வாக்களிக்க வேண்டுமா என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என்றார்.

இதில், காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸ், நிதி- மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திமுக கிழக்கு மாவட்ட செயலர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், பாளையங்கோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் மு.அப்துல் வஹாப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பேட்டையில் நடிகை விந்தியா பிரசாரம்

பேட்டையில் அதிமுகவுக்கு ஆதரவாக வாக்குசேகரித்த நடிகை விந்தியா. உடன், மாநகர் மாவட்டச் செயலர் தச்சை என்.கணேசராஜா.

திருநெல்வேலி, ஏப். 2: திருநெல்வேலி மக்களவைத் தொகுதி அதிமுக வேட்பாளர் ஜான்சிராணிக்கு ஆதரவாக, பேட்டையில் நடிகை விந்தியா செவ்வாய்க்கிழமை வாக்குசேகரித்தார்.

அப்போது அவர் பேசியது: தமிழகத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வரும் திமுக ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டுள்ளது. ஆனால், தங்களது கட்சி ஆட்சி நடைபெறுவதை மறந்து, கனிமொழி மக்களை ஏமாற்றி வருகிறார். உதயநிதி ஸ்டாலினும் தாங்கள் செயல்படுத்தி திட்டங்களைப் பற்றி பேச மறந்து, கடந்த தேர்தலில் பாஜக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லையென செங்கலோடு சுற்றி வருகிறார். தேர்தல் பிரசாரத்தில் அநாகரீகமாக பேசுவதை திமுக செய்து வருகிறது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை செயல்படுத்தாத திமுகவுக்கு பாடம் புகட்ட வேண்டும். திருநெல்வேலி தொகுதியில் போட்டியிடும் ஜான்சிராணிக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும் என்றார் அவர்.

அதிமுக திருநெல்வேலி மாநகர் மாவட்டச் செயலர் தச்சை என்.கணேசராஜா, மாநில அமைப்புச் செயலர் சுதா கே.பரமசிவன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

வாக்கு சேகரிப்பு...

திருநெல்வேலி மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ராபர்ட் புரூஸுக்கு ஆதரவாக 9 ஆவது வார்டு பகுதியில் மு.அப்துல்வஹாப் எம்எல்ஏ தலைமையில் செவ்வாய்க்கிழமை வாக்குசேகரித்த திமுகவினர். இதில், துணை மேயர் கே.ஆர்.ராஜு, மாமன்ற உறுப்பினர்கள் சுதா, கோகுலவாணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

100 சதவீதம்!

மக்களவைத் தேர்தலை முன்னிட்டு 100 சதவீத வாக்குப் பதிவை வலியுறுத்தி பாளையங்கோட்டை என்ஜிஓ காலனியில் அண்ணா பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணியை கொடியசைத்து தொடங்கிவைத்தார் மாநகராட்சி ஆணையரும், பாளையங்கோட்டை சட்டப்பேரவைத் தொகுதி உதவி தேர்தல் அலுவலருமான தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ்.

குண்டர் சட்டத்தில் ஒருவர் கைது

திருநெல்வேலி, ஏப். 2: திருநெல்வேலி மாவட்டம், தளபதிசமுத்திரத்தில் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் தொழிலாளி செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

ஏர்வாடி காவல் சரகப் பகுதியில் அடிதடி, கொலை முயற்சி போன்றவற்றில் ஈடுபட்டதாக தளபதி சமுத்திரத்தைச் சேர்ந்த தொழிலாளி முருகன் (52) கைது செய்யப்பட்டிருந்தார். இந்நிலையில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என். சிலம்பரசன் பரிந்துரையின்பேரில், ஆட்சியர் கா.ப.கார்த்திகேயன் பிறப்பித்த உத்தரவுப்படி அவர் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

கல்லூரி மாணவி தற்கொலை

திருநெல்வேலி,ஏப்.2: பாளையங்கோட்டை வண்ணார்பேட்டையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரி விடுதி மாணவி செவ்வாய்க்கிழமை தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

தென்காசி மாவட்டம், பண்பொழியைச் சேர்ந்த ஐயப்பன் மகள் நாகலெட்சுமி (18). இவர், வண்ணார்பேட்டையில் உள்ள தனியார் பொறியில் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். இந்நிலையில் இவர் கல்லூரி விடுதியில் தூக்கிட்ட நிலையில் இறந்துகிடந்தது செவ்வாய்க்கிழமை காலையில் தெரியவந்தது. பாளை. போலீஸார் அவரது சடலத்தைக் கைப்பற்றி வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர்.

பொது அறிவிப்பு

ஆ.விஜி, பி.ஏ பி.எல்., வழக்கறிஞர் ஆகிய நான் என் கட்சிகாரர், தூத்துக்குடி மாவட்டம், மேலூர், திரவியபுரம் 1வது தெரு, கதவு எண்.46B என்ற முகவரியில் வசித்து வரும் திருமதி.சரஸ்வதி த/பெ.ராஜாமணி மற்றும் க/பெ.ஞானராஜ் என்பவருக்காக கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால், சர்வே எண்.108, 107 உட்பிரிவு சர்வே எண்.107/1, 107/2, 108/2, புதிய உட்பிரிவு சர்வே எண்.107/1A2-ல் பிளாட் எண்.28-ல் வடபுரம், 936.655 சதுரடி நிலத்தினை ஆவண எண்.3463/2010 (தூத்துக்குடி கீழுர் SRO) மூலம் கிரையமாக பெற்ற சொத்தினை அசல் மூலபத்திர எண். 2913/2010 தூத்துக்குடியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுக்கும் போது தவறுதலாக தொலைத்துவிட்டார். மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுப்போர் எங்களிடம் ஒப்படைக்குமாறும் மற்றும் வேறு எவருக்கும் ஆட்சேபம் இருந்தாலும் இந்த அறிவிப்பு கண்ட ஏழு நாட்களுக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பொது அறிவிப்பு

ஆ.விஜி, பி.ஏ. பி.எல்., வழக்கறிஞர் ஆகிய நான் என் கட்சிக்காரர், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரபட்டினம், முத்தாரம்மன் கோவில் தெரு, கதவு எண்.174/8 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. முத்துராமலிங்கம் த/பெ. இசக்கிமுத்து மற்றும் திருமதி. சந்தனமாரி த/பெ.ராஜ்குமார், க/பெ. முத்துராமலிங்கம் என்பவருக்காக கொடுக்கும் அறிவிப்பு என்னவென்றால், அயன் நஞ்சை சர்வே எண் 1277/3,1278, உட்பிரிவு சர்வே எண்.1278/1A, 1277/3B, 1278/1A2-ல் 1908.83 சதுரடி நிலம் மற்றும் வீட்டினை ஆவண எண்.4620/2023 (உள்ளியூர் SRO) மூலம் கிரையமாக பெற்ற சொத்தின் அசல் மூலப்பத்திர எண். 311/2002 குலசேகரபட்டினத்தில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுக்கும் போது தவறுதலாக தொலைத்துவிட்டார். மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுப்போர் எங்களிடம் ஒப்படைக்குமாறும் மற்றும் வேறு எவருக்கும் ஆட்சேபம் இருந்தாலும் இந்த அறிவிப்பு கண்ட ஏழு நாட்களுக்குள் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

A.VIJI, B.A., B.L., Advocate, 7/A11, Kadalaiur Main Road, Opp Original Compound, Kovilpatti - 628501. Cell: 99440 46010.

தெற்கு ரயில்வே

பொருட்கள் மேலாண்மை துறை
ஏல விற்பனை நிகழ்ச்சி நிரலுக்கு சேர்க்கை (சிறப்பு)
அறிவிப்பு எண். 04/2024

ஃபெர்ரஸ் ஸ்க்ராப், ஃபெர்ரஸ் அல்லாதவை மற்றும் பல்வகை ஸ்க்ராப்கள், கழித்துக் கட்டப்பட்ட வேகன், பயணப்பெட்டிகள் & லோகோக்கள், ஸ்க்ராப் ரெயில்கள் மற்றும் பிற நிரந்தர வழி ஸ்க்ராப் பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்காக மின்னணு ஏலம் நடத்தப்படும்.

வ. எண்.	மின்னணு ஏலத்தை நடத்துபவர்	ஏற்கனவே இருந்த, ரத்து செய்யப்பட்ட ஏலத் தேதி	10.04.2024 தேதிக்கு பதிலாக மாற்றப்பட்ட தேதி	ஏலத்துக்கான பொருட்கள்
1	ஜெனரல் ஸ்டோர்ஸ் டெப்போ/ PER	10.04.2024	12.04.2024	மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் பற்றிய விவரங்கள் www.ireps.gov.inல் உள்ள பொருட்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

ஏப்ரல் 2024 மாதத்திற்கான அனைத்து பிற ஏல நிகழ்ச்சிகள் மாற்றப்படாமல் அப்படியே உள்ளன.

விரிவான கட்டளைகள் மற்றும் நிபந்தனைகள் அறியவும் ஏலப்பட்டியல் பதிவிறக்கம் செய்து கொள்ளவும் பார்வையிடுங்கள் : இணையதளம் : http://www.ireps.gov.in -> E-Auction ->Sale ->Live Auctions.

முதன்மை தலைமை பொருட்கள் மேலாளர்

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

Repco Home Finance

தென்காசி கிளை: எண்.117, முதல் தளம், PSS காம்ப்ளக்ஸ், இரயில்வே ஃபீடர் ரோடு, தென்காசி - 627 811.

அசையா சொத்துகளின் சுவாதீன அறிவிப்பு

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள், 2002-ன் (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002) -ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட **ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி** மூலம், மேற்படி சட்டம் 13(2) பிரிவின் விதி 9-ன் படி கீழே குறிப்பிட்ட தேதிகளிட்ட **கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice)** குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன் பெற்றவர்கள் / சக-கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.

கடன் பெற்றவர்கள், சக-கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன் பெற்ற நபருக்கும், சக-கடன்தாரர்களுக்கும், ஜாமீன்தாரருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பதென்னவென்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 9-வது விதியின்படியும் **கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 27.03.2024 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடமையாக்கியுள்ளார்.**

இது முதற்கொண்டு கடன் பெற்றவர்களோ, சக-கடன்தாரர்களோ, ஜாமீன்தாரர்களோ மற்றும் பொது மக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது **ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட், தென்காசி கிளை: எண்.117, முதல் தளம், PSS காம்ப்ளக்ஸ், இரயில்வே ஃபீடர் ரோடு, தென்காசி - 627 811-ல் வந்து சேர வேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டிக்கும், இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.**

SARFAESI சட்டம் பிரிவு 13(8)-ன் படி கடன் கொடுத்த வங்கியிடம் கடன்பாக்கி வட்டி, இதர செலவுகள், கட்டணங்கள், வங்கி செலவிட்ட தொகைகள் ஆகியவற்றை சேர்த்து, கடனுக்கு ஈடான சொத்தின் விற்பனைக்கு அல்லது உரிமை மாற்றித்தர நிர்ணயிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் செலுத்திவிட்டால் அந்த சொத்துக்கள் விற்பனை செய்யப்பட மாட்டாது அல்லது உரிமை மாற்றித்தரப்படமாட்டாது என்றும் உங்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: திரு. P. கண்ணன் சாமிகள் (இறந்தவர்), த/பெ. திரு. பாண்டியன், **சக-கடன்தாரர்-I: திருமதி. K. ராஜம்மாள் (இறந்தவர்),** க/பெ. லேட். திரு. P. கண்ணன் சாமிகள், **சக-கடன்தாரர்-II: திரு. K. செந்தில் குமார் (லேட். திரு. P. கண்ணன் சாமிகளின் சட்டப்பூர்வ வாரிசு),** த/பெ. லேட். திரு. P. கண்ணன் சாமிகள், எண்.17C/41, பிரதான சாலை, கிழக்குப் பகுதி, குமந்தபுரம், கடையநல்லூர், தென்காசி மாவட்டம், பின்கோடு - 627751. **சக-கடன்தாரர்-III: திரு. K. ரமேஷ் குமார் (மறைந்த திரு. P. கண்ணன் சாமிகளின் சட்டப்பூர்வ வாரிசு),** த/பெ. லேட். திரு. P. கண்ணன் சாமிகள், எண்.17C/41, பிரதான சாலை, கிழக்குப்பக்கம், குமந்தபுரம், கடையநல்லூர், தென்காசி மாவட்டம், பின்கோடு - 627751. **சக-கடன்தாரர்-IV: திருமதி K. மகேஸ்வரி (லேட். திரு. K. கண்ணன் சாமிகளின் சட்டப்பூர்வ வாரிசு),** க/பெ. லேட். திரு. P. கண்ணன் சாமிகள், எண்.17C/41, பிரதான சாலை, கிழக்குப் பகுதி, குமந்தபுரம் , கடையநல்லூர், தென்காசி மாவட்டம், பின்கோடு - 627751. **சக-கடன்தாரர்-V: திருமதி. K. மகாலட்சுமி (லேட். திரு. K. கண்ணன் சாமிகளின் சட்டப்பூர்வ வாரிசு),** த/பெ. லேட். திரு. P. கண்ணன் சாமிகள், எண்.17C/41, பிரதான சாலை, கிழக்குப் பகுதி, குமந்தபுரம், கடையநல்லூர், தென்காசி மாவட்டம், பின்கோடு - 627751. **ஜாமீன்தாரர்: திருமதி. A. பவுனம்மாள்,** க/பெ. திரு.ஆறுமுகம், எண்.34/1, சார்லஸ் நகர்-II, கலெக்டரேட் போஸ்ட், புதுக்கோட்டை மாவட்டம், பின்கோடு - 622005. மேலும் முகவரி: துப்புரவு பணியாளர் (அடிப்படை பணி), கல்வித் துறை, புதுக்கோட்டை மாவட்டம், பின்கோடு - 622005.

கோரிக்கை அறிவிப்பு தேதி : 27.09.2023; கோரிக்கை அறிவிப்பில் கோரப்பட்ட தொகை (கடன் கணக்கு எண்கள்.1911820000052, ரூ.5,11,333/- மற்றும் **26.09.2023** முதல் அதற்கான வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்; கடன் நிலுவைத்தொகை: ரூ.5,64,230/- மற்றும் **26.03.2024** முதல் அதற்கான வட்டி, கட்டணங்கள், இதர செலவுகள்;

அசையா சொத்துக்கள் விவரம்: அனைத்து துண்டுகள் மற்றும் பாகங்கள் கொண்ட அமைவிடம், தென்காசி பதிவு மாவட்டம், கிருஷ்ணாபுரம் கிராமம் கடையநல்லூர் துணைப் பதிவு அலுவலகம், குமந்தபுரம், கடையநல்லூர் நகராட்சி வரம்பு, வடக்குவிளை காலனி தெருவில் உள்ள 9வது தெருவில், புதிய வார்டு எண்.1, அயன் புஞ்சை சர்வே எண்.466/3Aல் 3478.75 சதுர அடி கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் **அளவீடுகள்:** கிழக்கு-மேற்கு 30.25 அடி, தெற்கு-வடக்கு 115 அடி மொத்த நிலப்பரப்பில் 1 ஏக்கர் 78 செண்ட் கட்டப்பட்ட RCC வீட்டுக் கட்டிடத்தின் கதவு எண்.17C, மின்சார சேவை இணைப்பு எண்.07-081-011-660 மற்றும் பொதுவான பாதை உரிமைகள் உட்பட. **எல்லைகள்: வடக்கில்:** கிழக்கு-மேற்கு தெரு, **தெற்கில்:** வேலு கோனாரின் புஞ்சை நிலம், **கிழக்கில்:** அருஞ்சுவாமி நிலம். **மேற்கில்:** முருகன் நிலம்.

தேதி : 27.03.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ரெப்கோ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்.

பொது அறிவிப்பு

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், திட்டன்குளம் கிராமத்தில் உள்ள மொத்த நிலத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் 48 செண்ட் (1,08,028 சதுரடி). இதில் (a) சர்வே எண்கள் 278/1A1 இல் அடங்கிய விஸ்தீரணம் 1 ஏக்கர் 02 செண்ட் மற்றும், 278/2A இல் அடங்கிய விஸ்தீரணம் 1 ஏக்கர் 39 செண்ட், ஆகா இந்நிலத்தின் உரிமையாளர் திருமதி. S. ராஜேஸ்வரி, (b) சர்வே எண்கள் 278/1A2 இல் அடங்கிய விஸ்தீரணம் 05 செண்ட் மற்றும், 278/2B இல் அடங்கிய விஸ்தீரணம் 02 செண்ட், ஆகா இந்நிலத்தின் உரிமையாளர் திரு. சந்தரராஜ். மேலே குறிப்பிட்டுள்ள உரிமையாளர்களின் அனுபவத்தில் இருக்கும் நிலத்தை எங்களது கட்சிக்காரர் கிரையம் பெற திர்மானித்து உள்ளார்.

எனவே இந்த சொத்து மீது, எந்த ஒரு நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ, விற்பனை, உரிமம், பரிமாற்றம், பரிசு, கட்டணம், அடமானம், குத்தகை, துணை குத்தகை, பங்கு, திட்டமிடல், பராமரிப்பு, உயில், உடன்படிக்கை, உடைமை, சட்டப்பூர்வ வாரிசுகள் உரிமை/தலைப்பு மற்றும் பாத்தியதை அல்லது வேறு எந்த வகையிலும் சொத்தின் மீதான உரிமை/கோரிக்கை இருப்பின், முழுமையான ஆவண சான்றுகள்/ஆதாரங்களுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் தெரியப்படுத்தவும், இல்லையெனில், அத்தகைய உரிமைகள் ஏதேனும் இருந்தால், கைவிடப்பட்டதாக கருதப்படும் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள உரிமையாளர்கள் தவிர வேறு எந்த நபருக்கும் அல்லது நிறுவனங்களுக்கும் உரிமையும், கோரிக்கையும் இல்லை என்றும், எங்களது கட்சிக்காரர் மேலே குறிப்பிட்டுள்ள உரிமையாளர்களிடமிருந்து சொத்தின் மீது பரிவர்த்தனை மேற்கொள்ள எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கருதப்படும்.

சொத்து விவரம்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், கோவில்பட்டி துணை பதிவு மாவட்டம், திட்டன்குளம் கிராமம், (a) சர்வே எண்கள் 278/1A1 இல் அடங்கிய விஸ்தீரணம் 1 ஏக்கர் 02 செண்ட் மற்றும், 278/2A இல் அடங்கிய விஸ்தீரணம் 1 ஏக்கர் 39 செண்ட், (b) சர்வே எண்கள் 278/1A2 இல் அடங்கிய விஸ்தீரணம் 05 செண்ட் மற்றும், 278/2B இல் அடங்கிய விஸ்தீரணம் 02 செண்ட், ஆக மொத்த நிலத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர் 48 செண்ட் (1,08,028 சதுரடி) ஆகும். இந்நிலத்திற்கான எல்லைகள்:

எல்லைகள்			
வடக்கு	தெற்கு	கிழக்கு	மேற்கு
சர்வே எண் 277 யில் உள்ள நிலம்	சர்வே எண்கள் 280/1, 280/3 மற்றும் 280/4 யில் உள்ள நிலங்கள்	சர்வே எண் 279 யில் உள்ள நிலம்	ஒரு பாதி கோவில்பட்டியிலிருந்து எட்டயபுரம் செல்லும் 80 அடி புறவழி சாலை, மற்றொரு பாதி சர்வே எண் 278/1B யில் உள்ள நிலம்

03.04.2024.
தூத்துக்குடி

Kavitha Vijay
Anu D'rose Prabhu
ADVOCATES
IC Universal Legal
Advocates & Solicitors
4th floor, Kakani Towers, #34, Khader Nawaz Khan Road, Nungambakkam, Chennai - 600006
Phone number - 044 - 4218 7856, 9840952025

Chola சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம் : சோழா க்ரஸ்ட், C54 & C55, சூப்பர் B-4, திரு வி க தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032 தமிழ்நாடு.

மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு (விற்பனை மின்னணு விலைகோரல் மூலம் மட்டும்)

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு அமலாக்கம் சட்டம் 2002 உடன் படிக்க – பிணைக்காப்பு அமலாக்கம் விதிகள் 2002 ன் விதி 8(6) மற்றும் 9(1) ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும் குறிப்பாக களம் (A) ல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கு) அறிவிக்கப்படுவது யாதெனில், ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் செய்யப்பட்டு / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டு, ஜாமீன் பெற்று கடனளித்த M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் களம் (D) ல் விவரிக்கப்பட்டவாறு ஆக்கபூர்வ / இயற்சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ள களம் (C) ல் விவரிக்கப்பட்ட அசையா சொத்துக்கள், "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு விற்பனை செய்யப்படும். இதன் மூலம் கடன்தாரர் / அடமானதாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசுகள், சட்டப்பூர்வ பிரதிநிதிகள் (தெரிந்தோ தெரியாமலோ) செயலுறுத்துபவர்(கள்) நிர்வாகி(கள்), பின் தொடர்ச்சியாளர்(கள்) மற்றும் பணியமர்த்தப்பட்டவர்(கள்), ஆகியோரில் களம் (A) ல் குறிப்பிட்டவாறு எது போருந்துமோ அது., அந்த நபருக்கு பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தயவு கூர்ந்து, ஜாமீன் பெற்று கடனளித்த M/s. சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ன் வலைதளம் https://www.cholamandalam.com & https://bankauctions.in ல் உள்ள தொடர்பை பார்வையிடவும்.

வ எண்	[A] கடன் கணக்கு எண். கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) பெயர்	[B] வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை (ஜாமீனளித்து பெற்ற கடன்)	[C] அசையா சொத்து / ஜாமீன் சொத்து விபரம்	[D] சுவாதீன வகை	[E & F] அடிப்படை விலை (ரூபாயில்) / டேவணித்தொகை (ரூபாயில்)	[G] ஏல தேதி மற்றும் நேரம்
1	கடன் கணக்கு எண்(கள்) : HL02TUL000046467 1). மாரியம்மாள் S 2). குமார் இருவரின் முகவரி எண். 8/603-1, ஜோதிபாஸ் நகர், மாப்பிள்ளையூரணி, மேலூர், தூத்துக்குடி, தூத்துக்குடி, கோவில் அருகில், தூத்துக்குடி - 628 002 தமிழ்நாடு. மேலும், சர்வே எண். 66/1, புதிய சர்வே எண். 66/1A1, ப்ளாட் எண். 29 தெற்கு பாகம், ஆல்பர்ட் நகர், மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து, மாப்பிள்ளையூரணி கிராமம், தூத்துக்குடி தாலுக்கா, தூத்துக்குடி மாவட்டம், கோவில் அருகில், தூத்துக்குடி - 628 002 தமிழ்நாடு.	01.04.2024 ம் தேதியின் படி, ரூ.26,71,257/- (ரூபாய். இருபத்து ஆறு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து இருநூற்று ஐம்பத்து ஏழு மட்டும்)	தூத்துக்குடி பதிவு மாவட்டம், தூத்துக்குடி கீழூர் சார் பதிவு மாவட்டம், தூத்துக்குடி தாலுக்கா, மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து, மாப்பிள்ளையூரணி கிராமம், பழைய சர்வே எண். 64/2B, 64/2E, 66/1, புதிய சர்வே எண். 66/1A1, பட்டா எண். 1483 ல் அமையப்பெற்ற ஆல்பர்ட் நகரில் உள்ள வீட்டுமனைகளில் உள்ள ப்ளாட் எண். 29 ன் தெற்கு பாகம்., இதன் பரப்பு 990 சதுர அடி = 2.273 சென்ட் பரப்பளவு கொண்ட வீட்டுமனை மற்றும் அதனுடன் கூடிய கதவு எண். 1/468-10, மின் இணைப்பு எண். 07-347-034-3308 மற்றும் அனைத்து இதர வசதிஜுடன் கூடிய சொத்து. எல்லைகளாவன வடக்கு - S. EPCI க்கு சொந்தமான ப்ளாட் எண். 29 ன் வடக்கு பாகம், தெற்கு - ப்ளாட் எண். 28, மேற்கு - ³40 அடி அகல கிழக்கு - சர்வே எண். 66/2 ல் உள்ள சைட். அளவீடுகளாவன – கிழமேல் வடக்கும் & தெற்கும் - 60 அடி., தென்வடல் கிழக்கும் & மேற்கும் - 16.50 அடி., என மொத்தம் 92 சதுர மீட்டர் = 990 சதுர அடி = 2.273 சென்ட் பரப்பளவு கொண்ட வீட்டுமனை மற்றும் அதனுடன் கூடிய அனைத்து இதர வசதிகள் முழுவதும்.	ஆக்கபூர்வ சுவாதீனம்	ரூ.30,17,280/- (ரூபாய். முப்பது இலட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று எண்பது மட்டும்) / ரூ.3,01,728/- (ரூபாய். மூன்று இலட்சத்து ஓராயிரத்து எழுநூற்று இருபத்து எட்டு மட்டும்)	06.05.2024 பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை (விலைப்புள்ளி ஆவணத்தின் படி, ஒவ்வொரு முறையும் 5 நிமிடம் என எண்ணிலடங்கா முறை தன்னியல்பான 5 நிமிட நேர நீட்டிப்புடன்)

1). ஆய்வு தேதி - 03.05.2024 காலை 11.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை. 2). குறைந்தபட்ச விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை – ரூ. 10,000/-
3). விலைப்புள்ளி / டேவணித்தொகை / பங்கேற்பதற்கான வேண்டுதல் கடிதம் சமர்ப்பித்தல் - 04.05.2024 மாலை 05.00 மணி வரை.

* மற்றும் பணம் செலுத்தப்படும் வரை மற்றும் / அல்லது பணமாக்கப்படும் வரை, கடன் ஒப்பந்த நிபந்தனைகளின் படி மேற்கொண்டு வரும் பொருந்தத்தக்க வட்டு, நிகழ் செலவுகள், செலவுகள், கட்டணங்கள் ஆகியன. சொத்து ஆய்வு தொடர்பான உதவி அல்லது விலைப்புள்ளி ஆவணம் பெற மற்றும் இதர விசாரணைகளுக்கு தயவு கூர்ந்து சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் அலுவலர் திரு மாரியப்பன் அவர்களை அவரது அலைபேசி எண். 9171131312, மின்னஞ்சல் முகவரி : mariappanm@chola.murugappa.com / திரு மொஹம்மத் அப்துல் க்வாவி அலைபேசி எண் 73059 90872 மூலம் தொடர்பு கொள்ளலாம். சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரின் சிறந்த அறிவுக்கும், தகவலுக்கும் எட்டிய வரையில் அசையா சொத்துக்கள் / ஜாமீன் சொத்துக்கள் மீது எந்த வில்லங்கமும் இல்லை.

இடம் : தூத்துக்குடி, தமிழ்நாடு
தேதி : 02.04.2024

ஒம்/ அதிகாரப்பூர்வ அலுவலர்
சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - க்காக

ஞாயிற்றுக்கிழமைதோறும் தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!